1973 பிப்ரவரி 26]

திரு. ஜி. ஆர். எட்மண்ட் : குறைந்த பட்சம் 50,000 கிலோகிராம் மீன் கிடைத்தால் தான் இவைகளையெல்லாம் நடத்த முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூடுதலான சுறா மீன்கள் பிடிக்க, கடலில் ஏதாவது சர்வே நடக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது 50,000 கிலோ கிராம் கிடைக்கவேண்டியிருக்க, 14,000 கிலோகிராம் சுறா மீன்தான் கிடைக்கின்றன. அதிகமாக சுறா மீன்கள் பிடிக்க ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. பெரிய சுறா மீன்கள் குறைந்த அளவில் கிடைக்கின்றன. அவைகளைச் சங்கிலி போட்டுப் பிடிக்க அதிகப் பணச் செலவு ஏற்படுகிறது. அவ்வளவு பணத்தைச் செலவழித்து லாபகரமாக எண்ணெய் தயாரிக்க முடியுமா என்றால், முடியாது. ஆகவே. எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்த்த பிறகு தான் அத்தகைய முறையை அரசாங்கம் கைவிட்டிருக்கிறது.

அரிசனக் குடியிருப்பு மனைக்கென கையகப்படுத்தப்பட்ட நிலம்.

*165 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971–72-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரிசனங்களுக்காக வீட்டு மனைகளை கையகப்படுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) கையகப்படுத்தப்பட்ட வீட்டு மனைகளின் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1971–72-ம் நிதி ஆண்டிற்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரிசனங்களுக்காக வீட்டு மனைகளைக் கையகப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,50,000·00.

(இ) ரூ. 1,56,308·16.

(உ) இம் மாவட்டத்தில் 29 கிராமங்களில் 42·00 எக்கரா நிலம் கையகப்படுத்தப்பட்டு 512 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

இசையனூரில் சர்வோதய சங்கத்திற்கு நிலம் வழங்கல்.

*166 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆற்காடு ஒன்றியத்தில் உள்ள இசையனூர் என்ற ஊரில் உள்ள சர்வோதய சங்கத்திற்கு அரசு புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து கொடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை எக்கர் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : வட ஆற்காடு சர்வோதய சங்கம் நிலக் கிரயம் கொடுக்க இசைந்தால் வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு வட்டம், இசையனூர் கிராமத்தில் 1·56 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்ய வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த சர்வோதய சங்கமானது பொதுமக்களுக்கு நன்மை செய்கிற ஒரு இயக்கமாக, கிராமப்புறத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிற காரணத்தால், அவர்களிடத்தில் பணம் பெறுமலேயே கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா, மற்றும் பல வசதிகளை அவர்கள் கேட்கிருர்கள். அதையும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தச் சங்கம் ஆண்டொன்றுக்கு ரூ. 7 லட்சத்திற்கு வியாபாரம் செய்கிறது. வியாபார நோக்கத்தோடு இருக்கிற காரணத்தால் அந்த நிலத்தை இலவச மாகக் கொடுப்பதற்கு இல்லை.

ஸ்ரீரங்கத்திற்குப் பதிலாக திருவரங்கம்.

*167 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஸ்ரீரங்கம் என்று வழங்கப்பட்டு வரும் ஊரின் பெயரை தூய தமிழில் "திருவரங்கம்" என மாற்றி அமைத்திட அரசு முயற்சிகள் மேற்கொண்டதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவுகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசின் ஒப்புதலைப் பெறவிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பொதுவாகவே தமிழகத் திலுள்ள வடமொழியில் அழைக்கப்படும் ஊர்களை, அதற்கு முன்னுல் ஆங்காங்கு அவைகள் தமிழ் மொழியில் அழைக்கப்பட்டு வந்த முறையில் மாற்றியமைக்க அரசு ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரர்களே, தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் சில ஊர்களின் பெயர்களை தமிழ் மொழியில் மாற்றம் செய்ய வேண்டுமென்று அரசுக்கு ஆலோசனை தெரிவித்தது. அந்த ஆலோசனையை அரசு ஏற்றுக்கொண்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி இருக்கிறோம். ஒப்புதல் வந்தவுடன் மாற்றப்படும்.

Manufacture of gas cylinders.

*168 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a gas cylinder manufacturing unit in this State; and

(*b*) if so, the details of the same?